/

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110286

1. District மாவட்டம் : அரியலூர் PS: காவல்நிலையம்: ல.ஒ.த.பிரிவு அரியலூர் Year: ஆண்டு: 2020 FIR No.: மு.த.அ. எண்: 6/2020 Date: நாள்: 19.12.2000

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: CrPC Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 18.12.20 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1745 Time to : நேரம் வரை 23.30
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.12.20 Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol IV 19.12.20 Time : நேரம் 13.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 10 கி.மீ. தெற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ந. ஜனகமாணிக்கம் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. O.S. வெங்கடேசன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர் மற்றும் 5 பேர்கள்.
   2. திரு. செல்வராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை I) வட்டார போக்குவரத்து அலுவலகம், கீழப்பழூர், அரியலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் தாமதமில்லை.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

1

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u> இன்று 19.12.2020 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ந.கனகமாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி என்பவர் என் முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.ந.கனக மாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்கள். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, பொருள் அரியலூர் மாவட்டம் வட்டார போக்குவரத்து அலுவலகம்- 18.12.2020 அன்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது- மேல் நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக. பார்வை 1.திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் செயல்முறை ந.க.எண். அ2/282/2020 நாள் 18.12.2020 2.திடீர் சோதனை செயல்முறைகள் நாள் 18.12.2020

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.12.2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19.12.20
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 14.00

Name: பெயர் அ.வானதி
Rank: நிலை காவல் ஆய்வாளர்

நான் திருச்சிராப்பள்ளி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அரியலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலை பேசி ரகசிய தகவலின் அடிப்படையில் 18.12.2020 ஆம் தேதி அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து காவல் ஆய்வாளர் திருமதி.V.வானதி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு அரியலூர் மாவட்டம், கீழப் பழுவூரில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன அய்வாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் வாகனங்கள் பதிவு செய்ய, பெர்மிட் வழங்க, ஓட்டுனர் உரிமம் வழங்க மற்றும் ஓட்டுனர் உரிமம் புதுப்பிக்க இடைத்தரகர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், இலஞ்சமாக பணம் வசூல் செய்வதாக கிடைத்த தகவலை தொடர்ந்து திடீர் சோதனை செய்து ரூ.1,09,580/- கனக்கு கூற இயலாத அல்லது கையூட்டு தொகையாக அல்லது கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றி அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிக்கணினி மூலம் தயார் செய்யப்பட்ட செயல் முறை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு.

அரியலூர் மாவட்டம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன அய்வாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள், வாகனங்கள் பதிவு செய்ய, பெர்மிட் வழங்க, ஓட்டுனர் உரிமம் வழங்க மற்றும் ஓட்டுனர் உரிமம் புதுப்பிக்க இடைத்தரகர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், இலஞ்சமாக பணம் வசூல் செய்வதாக அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 18.12.2020ஆம் தேதி மாலை சுமார் 17.45 மணியளவில் திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ந.கனகமாணிக்கம், அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.V.வானதி மற்றும் அலுவலர்கள் உதவியுடன், மேற்படி வட்டார போக்குவரத்து துறை அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அரியலூர் வட்டார போக்குவரத்து துறை அலுவலகமானது அரியலூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் மெயின் ரோட்டில் கீழப்பழுரில் சாலைக்கு மேற்கில் கிழக்கு பார்த்தவாறு வாசலுடைய தரைதளத்துடன் கூடிய இரண்டு மாடிக்கட்டிடம் ஆகும். தரைதளத்தில் போர்ட்டிகோவும் அதன் உள்ளே ஒரு பெரிய ஹாலும், ஹாலுக்கு தெற்கு பக்கம் வட்டாரபோக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறையும், ஹாலுக்கு மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையும், அந்த அறைக்கு தெற்கு பதிவறையும் அதைதொடர்ந்துள்ள மேற்கு பக்கமாக ஒரு வராண்டாவும் அதைஒட்டினார்போல் கழிவறையும் உள்ளது. நேர்முக உதவியாளர் அறைக்கு தெற்கே அலுவலக அறையும் அந்த அறையின் கீழ்புறம் தெற்கிலிருந்து வடக்காக முதலில் இளநிலை உதவியாளர்-II அறையும் மத்தியில் இளநிலை உதவியாளர்- I அறையும் வடக்கு பக்கம் உதவியாளர்-கனக்கு அவர்களின் அறையும் அலுவலக அறைக்கு தென்மேற்கு மூலையில் ஒரு பதிவறையும்உள்ளது. மெயின் ஹாலுக்கு வடக்கு பக்கம் மாடிப்படியும், அதற்கு அடுத்தார் போல் காத்திருப்போர் அறையும் அதற்கு அடுத்து LLR Room-ம் அதற்கு மேற்கு பக்கம் பாட்டன் Room-ம் அதற்க தெற்கு பக்கம் சர்வே ரூமும், அதற்கு அடுத்து மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-II அவர்கள் அறையும் தொடந்து மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I அவர்கள் அறையும் உள்ளது. இந்த கட்டத்தின் முதல் தளம் தரைத்தளம் போலவே அமைக்கப்பட்டுள்ளது. அந்த தளத்தில் மீட்டிங் ஹால் மற்றும் ஆவணங்கள் அறையும் உள்ளது.

மேற்படி அலுவலகத்தின் தரைத்தளததை திடீர் ஆய்வு செய்த போது வட்டார போக்கு வரத்து அலுவலர் திரு.வெங்கடேசன், மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I திரு.செல்வராஜ் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.A.ரவிசந்திரன், இளநிலை உதவியாளர்கள் திரு.கோபாலகிருஷ்ணன் மற்றும் திருமதி.லெட்சுமி ஆகியோரும் தட்டச்சர் திரு.மதியழகன் அவர்களும் Elcot Staff தரு.சக்திகுமார், திரு.அஜித்குமார், மற்றும்

திரு.கண்ணன் ஆகியோர்களும் ஆஜரில் இருந்தனர். அவர்களை சோதனை செய்தபோது அவர்களிடமிருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணத்தை அவர்களிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. திருமதி.லெட்சுமி என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.100/- இருந்தது அந்த பணம் அவரது பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.மதியழகன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.250/- இருந்தது அந்த பணம் அவரது பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. Elcot Staff திரு.கண்ணன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1000-ம் இருந்தது அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. இவர்களை தவிர அலுவலகத்துக்கு உள்ளே நின்றிருந்த நபர்களை விசாரித்ததில் (1) திரு.பிச்சைப்பிள்ளை, த/பெ செல்லமுத்து, 11, அவ்வையார் தெரு, துரைமங்கலம் பெரம்பலூர், (2) திரு.மகேஷ், த/பெ பெரியசாமி, 3/67, கீழத்தெரு, பரணம், செந்துறை, அரியலூர், (3) திரு.சுதாகர், த/பெ பாலன், 3/88, அண்ணா நகர், செங்குன்னம், பெரம்பலூர், (4) திரு.ரவி, த/பெ கந்தசாமி, 54-A, வாணிய செட்டியர் தெரு, மேலப்பழூர், அரியலூர், (5) திரு.நாகலிங்கம், த/பெ முத்துசாமி, (வட்டார போக்கவரத்து அலுவலரின் ஓட்டுநர் (ஓய்வு)), 47, நரியன் தெரு, ராம் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி, (6) திரு.சோழராஜன், த/பெ ராமலிங்கம், 51, தெற்கு தெரு, கோப்பிலியன் குடிக்காடு, அரியலூர் மற்றும் (7) செல்வி.அபிராமி, த/பெ ரவிக்குமார், 33, எம்.ஆர்.கே. காம்ப்ளக்ஸ், பூக்கார தெரு, அரியலூர் ஆகியோர்களை விசாரித்து அவர்களை சோதனை செய்ததில் திரு.பிச்சைப்பிள்ளை என்பவர் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாக கூறினார். அவரிடம் ரூ.26,000-ம் ஒரு கட்டாகவும் ரூ.250 தனியாகவும் இருந்தது அந்த பணத்தில் ரூ.250- அவரது செலவிற்காக வைத்திருந்த சொந்த பணம் என்றுகூறினார் ரூ.26,000-க்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. திரு.மகேஷ் என்பவரை விசாரித்ததில் அவர் அரியலூர் தஞ்சாவூர் ரோட்டில் வட்டார போக்குவரத்து அலுவலகத்து எதிரில் சற்று தெற்காக மலர் என்ற பெயரில் Xerox மற்றும் கனினியில் on line up load செய்யும் தொழில் செய்வதாக கூறினார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.29,440/-ம் இருந்தது. அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. திரு.ரவி என்பவரை விசாரித்ததில் அவர் KNR நிறுவனத்தில் ரோடு sub contractor ஆக வேலை செய்வதாக கூறினார். அவரிடம் ரூ.8,000-ம் அவரது பெயர் முகவரி போட்ட கவரிலும் மீதி பணம் ரூ.18,140- ஒரு கத்தையாகவும் தனித்தனியாகவும் இருந்தது. அந்த பணம் பற்றி விசாரித்ததில் இன்று காலையில் வங்கியிலிருந்து ரூ.14,000-ம் எடுத்து அதில் ரூ.5000-க்கு APN கடையில் ஜவுளி எடுத்ததாகவும் மீதிப்பணம் கையில் வைத்திருந்ததாகவும் கூறினார். ரூ.17,140-க்கு சரியான முகாந்திரம் கூறவில்லை. செல்வி.அபிராமி என்பவரை விசாரித்ததில் அவர் வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு எதிரில் உள்ள அரசு Xerox கடையில் வேலைபார்ப்பதாகவும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அலுவலக உதவியாளர் விடுப்பில் சென்றதால் பெர்மிட் மற்றும் ஆவணங்கள் Xerox எடுக்க கொடுத்திருந்ததை திருப்பி கொடுத்து பணம் வாங்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்த பணம் ரூ.2300-க்கு தகுந்த முகாந்திரம் தெரிவித்ததால் அந்த பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அதுபோல வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் போர்ட்டிக்கோ அருகே நின்றுகொண்டிருந்த நபர்களை விசாரிக்க அவர்கள் (1) திரு.ஜீவகன், த/பெ குப்தா, 19, வடக்கு மாரியம்மன் கோவில் தெரு, அரியலூர், (2) திருமதி ஆனந்தி, க/பெ செல்வராஜ், 7/4, தில்லைவரம், 3-வது தெரு, நாமக்கல், (3) திரு.பூபதி, த/பெ குழந்தைவேல், 22/6, அண்ணாநகர், கபிலன் மலை, பரமத்தி, நாமக்கல் ஆகியோர்களை விசாரித்து சோதனை செய்ததில் திரு.ஜீவகன் என்பவர் Sri Srinivasa என்ற பெயரில் 10 பஸ் வைத்து தொழில் செய்து வருவதாகவும் இன்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தனது வாகனத்துக்கு Tax Nil Assessment File கொடுத்திருந்தேன் அதற்கு

Order அகிவிட்டதா என்று பார்ப்பதற்கு வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது அவரது சட்டை பாக்கெட்டில் ரூ.100-ம் பேண்ட் பாக்கெட்டில் ரூ.21,000-மும் இருந்தது. ரூ.21,000-க்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்கவில்லை. மேற்படி நபர்களிடமிருந்த பணத்துக்கு சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு தங்களது வேலைகளை செய்ய லஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்று கருதி மேல் நடவடிக்கைக்காக இந்த திடீர் சோதனையின் போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மற்ற நபர்களிடமிருந்த பணத்திற்கு அவர்கள் தகுந்த முகாந்திரம் கூறியதால் அவர்களிடமிருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு பின்னால் தரையில் கிடந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணிபார்த்தபோது அதில் ரூ.15,000/- இருந்தது. அந்த பணம் பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக ஊழியர்களிடம் விசாரித்தபோது அவர்கள் எந்த முகாந்திரமும் தெரிவிக்காததால் அந்த பணம் வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு கொண்டுவந்த பணத்தை திடீர் தணிக்கை அலுவலர்களை பார்த்ததும் விட்டெரிந்த பணமாக இருக்கலாம் என்று கருதி திடீர் தணிக்கையின் போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக நிலையான முன்பதிவேடு, கொடுபடா முன்பண பதிவேடு மற்றும் வரவு செலவு கணக்குகளை சரிபார்க்கப்பட்டதில் கணக்கு சரியாக உள்ளது நிலுவை தொகை எதுவும் இல்லை.

இந்த அலுவலகத்தின் முதல் தளத்தை சோதனை செய்ததில் எந்த பணமும் கண்டுபிடிக்கவில்லை.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | வைத்திருந்த தொகை | கைப்பற்றப்பட்ட ரூபாய் | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | திரு.வெங்கடேசன், வட்டார போக்கு வரத்து அலுவலர் | ரூ.1,250/- | - | ரூ.1,250/- |
| 2. | திரு.செல்வராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர்-Gr-I | ரூ.20/- | - | ரூ.20/- |
| 3. | திரு.A.ரவிசந்திரன், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் | ரூ.1800/- | - | ரூ.1800/- |
| 4. | திரு.கோபாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் | ரூ.30/- | - | ரூ.30/- |
| 5. | திமதி.லெட்சுமி, இளநிலை உதவியாளர் | ரூ.100/- | - | ரூ.100/- |
| 6. | திரு.மதியழகன், தட்டச்சர் | ரூ.250/- | - | ரூ.250/- |
| 7. | தரு.சக்திகுமார், Elcot Staff | - | - | - |
| 8. | திரு.அஜித்குமார், Elcot Staff | - | - | - |
| 9. | திரு.கண்ணன், Elcot Staff | ரூ.1000/- | ரூ.1000/- | - |
| 10. | திரு.பிச்சைப்பிள்ளை, த/பெ செல்லமுத்து, 11, அவ்வையார் தெரு, துரைமங்கலம் பெரம்பலூர் | ரூ.26,250/- | ரூ.26,000/- | ரூ.250/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | திரு.மகேஷ், த/பெ பெரியசாமி, 3/67, கீழத்தெரு, பரணம், செந்துறை, அரியலூர் | ரூ.29,440/- | ரூ.29,440/- | - |
| 12. | திரு.சுதாகர், த/பெ பாலன், 3/88, அண்ணா நகர், செங்குன்னம், பெரம்பலூர் | ரூ.110/- | - | ரூ.110/- |
| 13. | திரு.ரவி, த/பெ கந்தசாமி, 54-A, வாணிய செட்டியர் தெரு, மேலப்பழுர், அரியலூர் | ரூ.26,140/- | ரூ.17,140/- | ரூ.9,000/- |
| 14. | திரு.நாகலிங்கம், த/பெ முத்துசாமி, முன்னாள் வட்டார போக்கவரத்து அலுவலரின் ஓட்டுநர், 47, நரியன் தெரு, ராம் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி | ரூ.850/- | - | ரூ.850/- |
| 15. | திரு.சோழராஜன், த/பெ ராமலிங்கம், 51, தெற்கு தெரு, கோப்பிலியன் குடிக்காடு, அரியலூர் | ரூ.5/- | - | ரூ.5/- |
| 16. | செல்வி.அபிராமி, த/பெ ரவிக்குமார், 33, எம். ஆர்.கே. காம்ப்ளக்ஸ், பூக்கார தெரு, அரியலூர் | ரூ.2,300/- | - | ரூ.2,300/- |
| 17. | திரு.ஜீவகன், த/பெ குப்தா, 19, வடக்கு மாரியம்மன் கோவில் தெரு, அரியலர் | ரூ.21,100/- | ரூ.21,000/- | ரூ.100/- |
| 18. | திருமதி.ஆனந்தி, க/பெ செல்வராஜ், 7/4, தில்லைவரம், 3-வது தெரு, நாமக்கல் | ரூ.1,160/- | - | ரூ.1,160/- |
| 19. | திரு.பூபதி, த/பெ குழந்தைவேல், 22/6, அண்ணாநகர், கபிலன் மலை, பரமத்தி, நாமக்கல் | ரூ.150/- | - | ரூ.150/- |
| 20. | திடீர் சோதனையின் போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு பின்னால் தரையில் கிடந்த ருபாய். | ரூ.15,000/- | ரூ.15,000/- | - |
| | மொத்தம் | 1,26,955/- | 1,09,580/- | 17,375/- |

வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு மற்றும் வட்டார கேபாக்குவரத்து அலுவலரின் அரசு வாகனம் TN 61 G 6161- ன் Trip Sheet, சிறப்பு பதிவேடு-2020 ஆகிய ஆவணங்கள் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கை இன்று 18.12.2020-ம் தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

18.12-2020ம் தேதி அரியலூர் வட்டார போக்குவரத்து அலுவலக திடீர் ஆய்வின் போது 1. திரு.கண்ணன், எல்காட் ஊழியர், 2. திரு.பிச்சைப்பிள்ளை, த/பெ செல்லமுத்து, 11, அவ்வையார் தெரு, துரைமங்கலம் பெரம்பலூர், 3. திரு.மகேஷ், த/பெ பெரியசாமி, 3/67,

கீழத்தெரு, பரணம், செந்துறை, அரியலூர், 4. திரு.ரவி, த/பெ கந்தசாமி, 54-A, வாணிய செட்டியர் தெரு, மேலப்பழுர், அரியலூர், 5. திரு.ஜீவகன், த/பெ குப்தா, 19, வடக்கு மாரியம்மன் கோவில் தெரு, அரியலூர், ஆகியோர்களிடம் கைப்பற்றப்பட்டது மற்றும் அலுவலகத்திற்கு பின்னால் தரையில் கிடந்த பணம் ரூ.15,000/- ஆக மொத்தம் ரூபாய் 1,09,580/-க்கு மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாததால் அந்த பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் கைப்பற்றப்பட்டதால், அந்த பணம் லஞ்சப் பணம் (Illegal Gratification) எனக் கருதப்படுவதால் மேற்படி அலுவலர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 18.12.2020 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் ரொக்கம் ரூ.1,09,580/- மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்) ந.கனகமாணிக்கம், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

அய்யா, இன்று 19.12.2020 ஆம் தேதி 12.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்ட கருத்துரை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2020 U/s 7 of the Prevention of Corruption Act1988 (as amended in 2018) r/w 102 Cr.P.C- ன்படி 13.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. V.V 19/12/2020.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

V.V
(V.வானதி) 19/12/2020.
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.